# தமிழர் பண்பாட்டியல்



பொன்னையா விவேகானந்தன்

## மரபும் பண்பும்

01

மீண்டும் மற்றுமொரு தொடரின் வாயிலாகத் தமிழர் தகவல் வாசகர்களாகிய உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. புதிய தொடரின் வழியாக எவ்வாறான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்பது தொடர்பில் பல தலைப்புகள் வந்து போயின. எதுவாயினும் எழுதப்படுபவை சமூகநலன் சார்ந்து அமைய வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இருந்ததில்லை.

முற்றிலும் மாறுபட்ட பண்பாட்டுத்தளத்தில் குடியேறி, அலைவுச் சமூகம் அடையாளத் - தோடு, வாழ்புலங்களில் நிரந்தரக் குடிமக்களாக எம்மை நிலைநிறுத்தியுள்ளோம். எனினும் நாம் எதிர்கொள்ளும் சவால்கள் புதிய வடிவங்களில் தோன்றிக்கொண்டேயிருக்கின்றன.

அவற்றில் முதன்மையானதாகவும் கால நீட்சியற்ற தீர்வைக் கண்டுகொள்ள வேண்டியதாகவும் தென்படுவது எமது தனித்துவமான பண்பாடு, மரபுகள் சார்ந்த விழிப்புணர்வை அனைவருக்கும் ஏற்படுத்துவதே.

நாம் தாயக வாழ்வியலில், அன்றாட நடத்தைக-ளின் வழியாக, இயல்பாகவும் தெளிவாகவும் மரபுகளையும் பண்பாடுகளையும் உள்வாங்கிக் கொண்டோம். அவற்றுக்காக விளக்கங்களையும் காரணங்களையும் கூட நாம் பெரிதும் தேட முற்பட்டதில்லை. ஆனால் எமது அலைவுச் சமூகத்தின் இளைய தலைமுறை எமது தனித்துவமான பண்பாட்டு நடத்தைகள் குறித்து வினாக்களை எழுப்புகின்றது. ஏன், எதற்கு, எப்படி என்று எமது பண்பாட்டு வேர்களின் முகவரிகளைத் தேட முயற்சிக்கின்றது.

அலைவுச் சமூக வாழ்வியலில் அன்றாட ஊடாட்டங்களிலும் சிந்தனையோட்டங்களிலும் எமது மரபுசார் பண்பாட்டின் தாக்கங்கள் குறைந்து செல்கின்றன. விழாக்களின் போதும் சடங்குகளின் போதும் தலைகாட்டும் பண்பாட்டு நடத்தைகள் எமது அன்றாடங்களில் தமது செல்வாக்கை இழந்து வருகின்றன.

இந்நிலையில் எமது மரபுகளும் பண்பாட்டு நடத்தைகளும் கல்வி என்ற நிலையில் பயிற்றப்பட வேண்டிய தேவை உணரப்படுகின்றது. இதுபற்றி நான் ஏற்கனவே எழுதியுள்ளேன்.

காலங்காலமாக எம்மால் பின்பற்றப்பட்டு வருகின்ற எல்லா நடத்தைகளுக்குமான விளக்கங்களும் தெளிவுகளும் மூத்தோர் அனைவருக்கும் தெரிந்திருக்கின்றது என்று கருதினால் அது தவறு.

நடைபெற்ற தமிழ் மரபுரிமை நிகழ்வு ஒன்றில் இதுபற்றிப் பேசி, சில பண்பாட்டுச் செயற்பாடுகளுக்கு விளக்கம் கூறினேன். பின்னர் என்னை அணுகிய சில பெரியவர்கள் 'நாமும் இவை பற்றிய விளக்கங்-களை இதுவரை அறிந்திருக்கவில்லை. நாம் எமது பண்பாட்டு செயற்பாடுகளின் விளக்கத்தைத் தெரிந்து கொண்டால் எமது பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளு-க்கும் சொல்லிக் கொடுக்கலாம்" என்றார்கள். உண்மையில் இது எனக்கு ஆச்சரியமானதாக இருக்கவில்லை. விழாக்களின் போது ஏன் மாவிலை கட்டுகின்றோம் என்பதன் அறிவியல் காரணம் எத்தனை பேருக்குத் தெரியும்?

'இளைய தலைமுறையினருக்கு மரபு, பண்பாட்டு நடத்தைகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றால் அவர்கள் வாழும் குடும்பங்களில் இவை பற்றிய தெளிவை ஏற்படுத்த வேண்டும்' என எண்ணிக் கொண்டேன். அந்த சிந்தனையோட்டத்தின் விளைவுதான் இந்தப் புதிய தொடர். 'எமது மரபு, பண்பாட்டு நடத்தைகள் தொடர்பான தெளிவான புரிதலை ஏற்படுத்துதல்' என்ற இலக்கோடு இப்புதிய தொடர் ஆரம்பமாகின்றது.

எமது மரபுகளும் பண்பாடுகளும் பல்வகைப்பட்டன. இவை அகநிலையிலும் புறநிலையிலும் பேணப்பட்டு வருகின்றன. மரபணுக்களிலும் சிந்தனையிலும் ஊறிக்கிடந்தபடியே எம்மை வழிநடத்திச் செல்லும் மரபுசார் செயலூக்கிகள் அகநிலை சார்ந்தவை. கட்புலனாகவல்ல விழாக்கள் சடங்குகள் போன்ற செயற்பாடுகள் புறநிலை சார்ந்தவை. இவையனைத்தையும் பகுத்தும் விரித்தும் எழுத முற்பட்டால் அவை பெரும் ஆய்வு நூலாவே அமைந்து விடவல்லவை.

தாயகத்தில் நாம் கைக்கொண்ட அனைத்து நடத்தைகளையும் உள்ளவாறே இங்கு பின்பற்றிச் செல்ல முடியாது. ஒரு வாழிடத்தின் நில அமைவும் காலநிலையும் அந்த வாழிடத்துக்குரிய பண்பாட்டு நடத்தைகளை வடிவமைப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன. எமது பண்பாட்டு நடத்தைகள் பெரிதும் தாயக வாழ்வுச் சூழலுக்கு ஏற்பவே வடிவம் பெற்றிருந்தன. அவ்வாறான நடத்தைகளை வடிவம் மாறாமல் இங்கு பின்பற்றுவது நடைமுறைக்கு ஒவ்வானது அல்ல. வாழிடச் சூழலுக்கு ஏற்ப, பண்பாட்டு நடத்தைகளில் ஏற்றுக்கொள்ளக் கூடிய மாற்றங்களைச் செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

எடுத்துக்காட்டாக எமது புலம்பெயர் வாழிடங்களில் தைமாதத்தில் வீட்டு முற்றத்தில் பொங்கல் செய்வது சாத்தியமானதல்ல. ஆனால் பொங்கல் செய்தாக வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. அவ்வாறாயின் பொங்கல் புலம்பெயர் வாழிடங்களில் புதுவடிவம் பெறுவது தவிர்க்க முடியதாகின்றது.

எனவே, அலைவுச் சமூகத்தின் வாழ்வுச் சூழலுக்கேற்ப, அவசியமான மரபுகளையும் பண்பாட்டு நடத்தைகளையும் தெரிவுசெய்து அவற்றுக்கான தெளிவாக விளக்கங்களை வழங்குவதாக இத்தொடர் அமையும். அத்துடன் மாற்றங்களுக்குட்பட வேண்டிய நடத்தைகளையும் இக்கட்டுரைத் தொடர் பரிந்துரை செய்யும்.

இக்கட்டுரைத் தொடர் இளைய தலைமுறையின் வாசிப்புக்கானது என்று கூறிவிட முடியாது. உண்மையில இது பெரியவர்களுக்கான தொடரே. இத்தொடரினூடாகப் பெற்றுக்கொள்ளும் விளக்கங்களைப் பெரியோர் இளைய தலைமுறையினருடன் பகிர்ந்து கொள்ள முடியும்.

தமிழர் தகவல் வாசகர்களே! நீங்களும் இக்கட்டுரைத் தொடரில் பங்காற்ற முடியும். காலங்காலமாக நாம் கைக்கொண்டுவரும் பண்பாட்டு நடத்தைகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் தொடர்பில் நீங்களும் பல தகவல்களை அறிந்திருப்பீர்கள். அவற்றை என்னோடு பகிர்ந்து கொள்வீர்களேயாயின் இத்தொடர் மேலும் சிறப்புப் பெறும்.